**மார்ச் – 21**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநிலமானது, மார்ச் 21 முதல் 25 ஆம் தேதி வரையில் அலுவல் மொழி சட்ட வாரத்தைக் கொண்டாடுகிறது.
- தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் ஆனது, ஒரு சுற்றுலாத் தலமாக மாநிலத்தின் திறனை வெளிப்படுத்துவதற்கும், சுற்றுலா வணிகத்தினை ஊக்குவிப்பதற்கும், என்று சுற்றுலா தொடர்பான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பயணச் சந்தையை ஏற்பாடு செய்ய உள்ளது.
- தமிழ்நாடு அரசு ஆனது, அதன் கூடுதல் தலைமை வழக்கறிஞர் (AAG) பதவியை மூத்த வழக்கறிஞர் M. அஜ்மல் கான் என்பவருக்கு அளித்ததையடுத்து தற்போது அவர் AAG-I ஆக நியமிக்கப்பட உள்ளார்.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது, உள்ளூர் வணிகங்களை ஆதரிப்பதற்கும், மூலதனச் சந்தைகளை வலுப்படுத்துவதற்கும், மேலும் பசிபிக் பிராந்தியத்தில் மிக நிலையான பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் எல்லைப்புற ஊக்குவிப்பு (பசிபிக்) திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- தானேயின் பிவாண்டி எனுமிடத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவிற்காக நிறுவப்பட்டு உள்ள அந்த மாநிலத்தின் முதல் கோவிலை மகாராஷ்டிரா மாநில முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- அசாமின் டெர்கானில் லச்சித் பர்புகன் காவல் துறை பயிற்சிக் கழகம் திறக்கப்பட்டு உள்ளது.
- இந்தியா மற்றும் மலேசியா ஆகியவை இரண்டும் இணைந்து தலைமை தாங்கிய ஆசியான் அமைப்பின் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் - பிளஸ் (ADMM-பிளஸ்) அமைப்பின் நிபுணர்கள் பணிக்குழுவின் (EWG) 14வது கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
    - இந்தத் தீவிரவாத எதிர்ப்புக் குழுவிற்கு இந்தியா முதல் முறையாகத் தலைமை தாங்கியுள்ளது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இடைநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதம் 2023-24

- தமிழ்நாட்டின் பள்ளி இடைநிற்றல் விகிதம் ஆனது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மட்டங்களில் 0% ஆகக் குறைந்துள்ள நிலையில், இடைநிலைப் பள்ளி மட்டத்தில் இடை நிற்றல் விகிதம் 7% ஆக உள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில் இடைநிற்றல் விகிதம் குறைந்து வருகிறது என்பதோடு 2022-23 ஆம் ஆண்டில் 10.3% ஆக இருந்த இடைநிற்றல் விகிதம் ஆனது 7.7% ஆகக் குறைந்து உள்ளது.
- தமிழ்நாட்டின் இடைநிற்றல் விகிதம் ஆனது, 10.9% என்ற தேசியச் சராசரியினை விடக் குறைவாக உள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் அறிக்கையின்படி, உலகளாவிய பள்ளி இடைநிற்றல் சராசரி விகிதம் 13% ஆகும்.
- இங்கு ஆண் குழந்தைகளிடையே நிலவும் பள்ளி இடை நிற்றல் விகிதம் ஆனது பெண் குழந்தைகளிடையே உள்ள விகிதத்தினை விட தொடர்ந்து அதிகமாக உள்ளது என்ற


ஒரு நிலையில் 2023-24 ஆம் ஆண்டில் இடைநிலைப் பள்ளி நிலையில் 4.4% ஆக இருந்த பெண் குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்துடன் அதனை ஒப்பிடும் போது, ஆண் குழந்தைகள் மத்தியிலான இடைநிற்றல் விகிதம் 10.8% ஆக உள்ளன.

- 2014-15 ஆம் ஆண்டில், ஆண் குழந்தைகள் மத்தியில் பள்ளிப் படிப்பு இடைநிற்றல் விகிதம் சுமார் 16.1% ஆகவும், பெண் குழந்தைகள் மத்தியில் இந்த விகிதம் 8% ஆகவும் இருந்தது.



- தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் மொத்த மாணவர் பதிவு (ஜிஇஆர்) விகிதம் 98.4% ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 97.5% ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 82.9% ஆகவும் உள்ள நிலையில், தேசிய அளவில் இந்த விகிதம் முறையே 91.7%, 77.4% மற்றும் 56.2% ஆக உள்ளது.
- **தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்வியில் ஆசிரியர் -மாணவர் விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது.**
- **மேல்நிலைக் கல்வியில் இடைநிற்றல் வீதம் தேசிய சராசரி 12.6% ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 4.5% ஆக மட்டுமே உள்ளது.**
- **நாட்டிலயே சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளது.**

## பெற்றோர் பராமரிப்பு குறித்து சென்னை உயர்நீதிமன்றம்





- பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வெளிப்படையான நிபந்தனை இல்லாவிட்டாலும், குழந்தைகள் தங்களைப் பராமரிக்கத் தவறினால் அந்தப் பெற்றோர்கள் தானப் பத்திரங்களை ரத்து செய்ய உரிமை உண்டு என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறி உள்ளது.
- ஆனால், 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்தக் குடிமக்கள் மீதான பராமரிப்புச் சட்டத்தின் 23(1) பிரிவானது, தான/சொத்துத் தகராறு தீர்வுப் பத்திரங்களில் அத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

- 23(1) வது பிரிவின் கீழ் உள்ள நிபந்தனையானது வெளிப்படையாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், பெற்றோருக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையில் உள்ள உறவின் அடிப்படையில் அது மறைமுகமாக இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நடுவர் ஆயம் கூறியுள்ளது.

## திருச்சி மண்டலத்தில் காணப்படும் ஈரநிலப் பறவை இனங்கள்

- ஒருங்கிணைக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு ஈரநிலப் பறவைகள் கணக்கெடுப்பின் போது பல்வேறு ஈரநிலப் பறவை இனங்கள் காணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது திருச்சி மாவட்டத்தில் கூத்தைப்பர், கிளியூர், கிருஷ்ண சமுத்திரம், முக்கொம்பு, திருவெறும்பூர், துறையூர், ஆலத்துடையான்பட்டி, துவரங் குறிச்சி மற்றும் மணப்பாறை உள்ளிட்ட 20 சதுப்பு நிலங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- வலசை போகும் பறவைகளைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தக் கணக்கெடுப்பு ஆனது, ஏரிகள், குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளில் பறவைகளின் வாழ்விடங்களை மதிப்பிடுகிறது.
- ஈரநிலப் பறவைகளின் பயனுள்ள மேலாண்மை மற்றும் வளங்காப்பினை உறுதி செய்ய இது உதவும்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் கவிநாடு குளம், ஆரியூர் குளம், அன்னவாசல் பெரிய குளம், சிறுங்காகுளம் உள்ளிட்ட 25 சதுப்பு நிலங்களிலும் இந்தக் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.





# தேசியச் செய்திகள்

## சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்தல்

- பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மாண் (PM-POSHAN) திட்டத்தின் கீழ், அனைத்து அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளிலும் மேற்கொள்ளப் படுகின்ற மதிய உணவுத் திட்டத்தில் சமையல் எண்ணெயின் பயன்பாட்டை 10% குறைக்குமாறு மத்திய அரசு

மாநிலங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

- மிகவும் புதுமையான வழிகள் மூலம் அன்றாட வாழ்க்கையில் சமையல் எண்ணெயின் பயன்பாட்டை 10% குறைப்பது குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 5 முதல் 19 வயதிற்குட்பட்ட 12.5 மில்லியன் குழந்தைகள் அதிக உடல் எடையுடன் இருந்தனர் என்பதோடு இது 1990 ஆம் ஆண்டில் சுமார் 0.4 மில்லியன் ஆக இருந்தது.
- ஆக நகர்ப்புறங்களில் இந்த எண்ணிக்கையானது பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளில் அதிகமாக இருந்தது.
- PM-POSHAN என்பது மாணவர்களுக்கு சத்தான உணவை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.
- இந்த முன்னெடுப்பானது, மழலையர் பள்ளிகள் மற்றும் அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சேரும் அனைத்து குழந்தைகளுக்கும் பயன் அளிக்கிறது.




# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்க அரசின் 43 நாடுகளுக்கான பயணத் தடை 2025

- டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் ஆனது, 43 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களைப் பாதிக்கக் கூடிய மாபெரும் பயணத் தடையை அறிவிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது.
- மிக குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவின் அண்டை நாடுகளான ஆப்கானிஸ்தான், பூடான், மியான்மர் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இங்கு முன்மொழியப்பட்ட இந்தக் கொள்கையானது உலக நாடுகளை ஒவ்வொன்றும்

வெவ்வேறு அளவிலான சில பயண வரம்புகளைக் கொண்டுள்ள வகையில் 'சிவப்பு', 'ஆரஞ்சு' மற்றும் 'மஞ்சள்' நிறப் பட்டியல்களாக வகைப்படுத்துகிறது.

**Countries under potential travel restrictions by the US**

**Red List**

1. Afghanistan
2. Bhutan
3. Cuba
4. Iran
5. Libya
6. North Korea
7. Somalia
8. Sudan
9. Syria
10. Venezuela
11. Yemen

**Orange List**

1. Belarus
2. Eritrea
3. Haiti
4. Laos
5. Myanmar
6. Pakistan
7. Russia
8. Sierra Leone
9. South Sudan
10. Turkmenistan.

**Yellow List**

1. Angola
2. Antigua and Barbuda
3. Benin
4. Burkina Faso
5. Cambodia
6. Cameroon
7. Cape Verde
8. Chad
9. The Republic of Congo
10. Congo
11. Dominica
12. Equatorial Guinea
13. Gambia
14. Liberia
15. Malawi
16. Mali
17. Mauritania
18. St Kitts and Nevis
19. St Lucia
20. São Tomé and Príncipe
21. Vanuatu
22. Zimbabwe.

## உலகின் மிகப்பெரிய வெள்ளை ஹைட்ரஜன் இருப்பு

| Colour | Fuel | Process | Products |
|---|---|---|---|
| Brown/Black | Coal | Steam reforming or gasification | $H_2 + CO_2$ (released) |
| White | N/A | Naturally occurring | $H_2$ |
| Grey | Natural Gas | Steam reforming | $H_2 + CO_2$ (released) |
| Blue | Natural Gas | Steam reforming | $H_2 + CO_2$ (% captured and stored) |
| Turquoise | Natural Gas | Pyrolysis | $H_2 + C$ (solid) |
| Red | Nuclear Power | Catalytic splitting | $H_2 + O_2$ |
| Purple/Pink | Nuclear Power | Electrolysis | $H_2 + O_2$ |
| Yellow | Solar Power | Electrolysis | $H_2 + O_2$ |
| Green | Renewable Electricity | Electrolysis | $H_2 + O_2$ |

- பிரான்சு நாடானது, மொசெல்லே என்ற பகுதியில் 92 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள 46 மில்லியன் டன் வெள்ளை ஹைட்ரஜன் இருப்பைக் கண்டறிந்துள்ளது.
- சாம்பல் மற்றும் பச்சை நிறங்கள் இல்ல ஹைட்ரஜனைப் போலல்லாமல், வெள்ளை


ஹைட்ரஜனுக்கு தொழில்துறை உற்பத்தி தேவையில்லை என்பதோடு மேலும், $CO_2$ வாயுவினையும் இது வெளியிடுவதில்லை.

- ரஷ்யா, ஓமன், பிரான்சு, மாலி மற்றும் இதர பிற இடங்களிலும் வெள்ளை ஹைட்ரஜன் இருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்


## இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சி 2025

- இந்தியாவின் பிப்ரவரி மாத சரக்குப் பொருட்கள் வர்த்தகப் பற்றாக்குறையானது மூன்றரை ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 14.05 பில்லியன் டாலராகக் குறைந்து உள்ளது.
- பிப்ரவரி மாதத்தில் இந்தியாவில் சுமார் 5 பில்லியன் டாலர் அளவில் சிறிய உபரியும் பதிவானது.
- முந்தைய ஆண்டின் பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும் போது ஏற்றுமதியானது சுமார் 11% குறைந்து 36.91 பில்லியன் டாலராகவும், இறக்குமதியானது சுமார் 16% குறைந்து 50.96 பில்லியன் டாலராகவும் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கொல்கத்தாவில் மனித கொரோனா வைரஸ் HKU1




- கொல்கத்தாவில் ஒரு நோயாளி மனித கொரோனா வைரஸ் அல்லது HKU1 எனப்படும் ஒரு வகையான கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

- HKU1 வைரசானது பொதுவாக லேசான சுவாச கோளாறுகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும், இதில் பெருந்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.
- HKU-1 ஆனது, முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் ஓர் அரிய தனிமைப்படுத்தல் தேவைப் படும் நோயாக அடையாளம் காணப்பட்டது.
- இது முக்கியமாக நுரையீரல் மற்றும் சுவாச மண்டலத்தைப் பாதிக்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## IUCN பசுமை பட்டியல் - நான்கு புதிய தளங்கள்

- IUCN அமைப்பின் பசுமை/பச்சை நிறப் பட்டியலில் நான்கு புதிய தளங்கள் சேர்க்கப் பட்டுள்ளன மற்றும் மூன்று மீண்டும் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இப்பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நான்கு தளங்கள் மேற்கு ஆசியாவினைச் சேர்ந்தவை.
- அவையாவன,
    - ஷரான் இயற்கை காப்புப் பகுதி - சவுதி அரேபியா
    - சவுதி அரேபியாவின் மன்னர் அப்துல்அஜிஸ் ராயல் இயற்கை காப்புப் பகுதி
    - ஜோர்டானின் அகபா கடல் சார் காப்புப் பகுதி மற்றும்
    - ஐக்கிய அரபு அமீரகத்தின் சர் பு நாயர் பாதுகாக்கப்பட்ட பகுதி.
- IUCN அமைப்பின் பசுமைப் பட்டியல் என்பது பயனுள்ள, சமமான மற்றும் மிகவும் வெற்றிகரமான பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காக்கப்பட்டப் பகுதியை அடைவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவியச் சான்றிதழ் வழங்கீட்டுத் திட்டமாகும்.





# மாநிலச் செய்திகள்

## தெலுங்கானாவில் 2025 ஆம் ஆண்டில் OBC இட ஒதுக்கீடு

- சாதி வாரிக் கணக்கெடுப்பின் ஒரு அடிப்படையில் இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தும் முதல் மாநிலமாக தெலுங்கானா மாற உள்ளது.
- அரசு வேலை வாய்ப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கான (BCs) இட ஒதுக்கீட்டை 42 சதவீதமாக உயர்த்தச் செய்வதற்கான முக்கிய மசோதாவை அம்மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- தெலுங்கானாவின் இந்தப் புதிய இட ஒதுக்கீட்டு மசோதா ஆனது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என்று 42 சதவீதமும், பட்டியலிடப்பட்டச் சாதியினருக்கு 18 சதவீதமும்,

பட்டியலிடப் பட்டப் பழங்குடியினருக்கு 10 சதவீதமும் என்று இடங்களை ஒதுக்க முன் மொழிகிறது.

- இது முறையே தற்போதுள்ள 29 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 6 சதவீதம் என்பதிலிருந்து அதிகரிக்கப் பட உள்ளது.
- இதன் மூலம், உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த 50 சதவீத இட ஒதுக்கீட்டின் வரம்பை 70 சதவீதமாக உயர்த்த தெலுங்கானா இலக்கு வைத்துள்ளது என்பதால் இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் அவசியமாகும்.
- பீகார் மற்றும் கர்நாடகா ஆகியவற்றிற்குப் பிறகு சாதிவாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நடத்திய மூன்றாவது மாநிலம் தெலுங்கானா ஆகும்.



IT'S ALL IN THE HOUSE

Telangana Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes (Reservation of Seats in Educational Institutions and Appointments or Posts in the Services Under the State and Seats in Local Bodies) Bill set to be tabled in Assembly on Tuesday

Bill is likely to propose increasing reservations for BCs to 42% in education and employment from the existing 25% (excluding 4% for backward Muslims), and 42% reservations in local bodies from the existing 23% in line with the promise made by the Congress during the 2023 Assembly elections in the form of the "Kamareddy Declaration"

Bill will propose increasing reservations for SCs to 17% from the existing 10%

Government will propose enhancing reservations for STs by 1%, to a total of 7%

This will take the total reservations to around **66-67%,** far beyond the Supreme Court ceiling of **50%**

Once the state Legislature passes the bill, it will be sent for the assent of the President of India, with a request to include it in the Ninth Schedule of the Constitution as was done in the case of Tamil Nadu

It may be recalled here that the state Legislature passed a bill in April 2017 seeking to increase reservations for Muslims from 4% to 12% and for STs from 6% to 10%. The President is yet to clear it

BC population in Telangana is 46.25% (as per the caste survey report)

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுனிதா வில்லியம்ஸ்

- சுமார் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) தங்கி இருந்த பிறகு விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் பூமிக்குத் திரும்பியுள்ளனர்.
- திரு. வில்மோர் மற்றும் திருமதி. வில்லியம்ஸ் விண்வெளியில் 286 நாட்கள் தங்கி இருந்தனர்.
- அவர் விண்வெளிக்குப் பயணம் மேற்கொண்ட போது எதிர்பார்த்ததை விட சுமார் 278 நாட்கள் அதிக நாட்கள் விண்வெளியில் செலவிட்டுள்ளனர்.
- அவர்கள் பூமியை 4,576 முறை சுற்றி வந்தனர் மற்றும் விண்கலப் பெட்டகம் புவிக்குத் திரும்பும் நிலையில் போது சுமார் 121 மில்லியன் மைல்கள் (சுமார் 195 மில்லியன் கிலோமீட்டர்) பயணம் செய்தனர்.
- ஒன்பது விண்வெளி நடைப் பயணங்களில், 62 மணி நேரம் விண்வெளியில் நடந்து, பெண் விண்வெளி வீரர்களில் அதிக நேரம் விண்வெளி நடைப் பயணத்தில் செலவிட்ட பெண்மணி என்ற சாதனையை வில்லியம்ஸ் படைத்துள்ளார்.
- கடந்த ஆண்டு ஜூன் 05 ஆம் தேதியன்று நாசாவின் போயிங் என்ற பயணக் குழுவின் விண்வெளிப் பயணச் சோதனையில் நாசாவின் இரண்டு விண்வெளி வீரர்களும் விண்வெளிக்குச் சென்றனர்.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் என்ற விண்கலம் ஆனது, பூமியின் சுற்றுப்பாதை

மற்றும் அதற்கு அப்பாலான பகுதிகள் வரை ஏழு பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய வகையில் உள்ளது.




## முக்கிய தினங்கள்

### உலக தூக்க தினம் - மார்ச் 14

- இது மார்ச் மாதத்தின் சம இரவு பகல் நாளுக்கு முந்தைய வெள்ளிக்கிழமையன்று அனுசரிக்கப் படும் வருடாந்திர விழிப்புணர்வு நிகழ்வாகும்.
- இந்த நாள் ஆனது, உலகம் முழுவதும் உள்ள மக்களுக்குத் தூக்கத்தின் முக்கியத்துவம் குறித்து கற்பிப்பதையும், தூக்கம் குறித்து மக்கள் கொண்டுள்ள மிகவும் முக்கியக் கண்ணோட்டத்தினையும், தூக்கத்தின் போது எதிர்கொள்ளும் ஒரு அனுபவத்தினை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Make Sleep Health a Priority" என்பதாகும்.




### போர்த்தளவாட/ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் - மார்ச் 18

- 1801 ஆம் ஆண்டில் கொல்கத்தாவிற்கு மிக அருகில், காலனித்துவ இந்தியாவில் முதல் போர்த்தளவாட தொழிற்சாலை நிறுவப்பட்டதை இந்த நாள் நினைவு கூர்கிறது.
- கொல்கத்தாவின் கோசிபூரில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப் பழமையான போர்த் தளவாடங்கள் தொழிற்சாலையானது 1802 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- 1787 ஆம் ஆண்டு, இஷாபூரில் நிறுவப்பட்ட ஒரு துப்பாக்கித் தொழிற்சாலை 1791 ஆம்

ஆண்டு முதல் அதன் உற்பத்தியைத் தொடங்கியது.

- 1842 ஆம் ஆண்டு, உத்தரப் பிரதேசத்தின் கான்பூரில் சிறிய வகை பீரங்கித் தொழிற் சாலை அமைக்கப்பட்டது.
- 1904 ஆம் ஆண்டு, இஷாபூரில் சிறு ஆயுதத் தொழிற்சாலை நிறுவப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★